# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் : 158 / CPT  அங்கீகாரம் பெற்றது  இணைப்பு : CITU & EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005

Telephone No: 044-28548529  Email: coteecitu_hqchennai@yahoo.com
Fax No: 044-28516574  coteecitu@gmail.com

CITU


**சுற்றறிக்கை எண் 11/2013**  **நாள் : 23/03/2013**

*பெறுநர்*

***மத்திய அமைப்பின் அனைத்து நிர்வாகிகள்,***
***கிளைச் செயலாளர்கள் மற்றும்***
***மாநில செயற்குழு உறுப்பினர்கள்.***

அன்பான தோழரே, வணக்கம்,

2012 டிசம்பர் 15, 16 தேதிகளில் மின்ஊழியர் மத்திய அமைப்பின் 14 வது மாநில மாநாடு கோவையில் நடைபெற்றது அம்மாநாட்டில் மின் வாரிய ஊழியர்களின் தேங்கியுள்ள பிரச்சனைகளை மையமாக வைத்து 2013 மார்ச் 5 இல் பெருந்திரள் கூட்டு முறையீடு செய்வதன்று முடிவு செய்து அதற்கான தயாரிப்பு பணிகள் நடந்து வந்தன.

கூட்டு முறையீடுக்கு முன்னர் வைக்கப்பட்ட கோரிக்கைகளில் ஒன்று, உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் பகுதி நேர ஊழியர்களை பணி நிரந்தரம் செய்வதில் ஏற்பட்ட பிரச்சனைகள், நிரந்தரம் செய்யப்பட்ட பகுதி நேர ஊழியர்களுக்கு இதர நிரந்தர தொழிலாளிகளுக்கு வழங்கும் அனைத்து சலுகைகளையும் நீட்டித்து வழங்குவது புதியதாக துவங்கப்பட்ட மின் வாரிய அலுவலகங்களில் பகுதி நேர ஊழியர்களை பணி அமர்த்துவதற்கு உண்டான அனுமதியை வழங்குவது போன்ற கோரிக்கைகளை முன் வைத்தோம்.

மத்திய அமைப்பு போராட்ட அறைகூவலை அமல் படுத்த எடுத்த முயற்சி மின் வாரிய நிர்வாகத்தை அசைக்க வைத்து பகுதி நேர ஊழியர்கள் சம்மந்தமாக நாம் எழுப்பிய கோரிக்கைகளில் தீர்வு காணுகின்ற வகையில் இரு வாரிய உத்தரவுகளை பிறப்பித்துள்ளது. உத்தரவின் நகல்கள் இத்தோடு இணைக்கப்பட்டுள்ளது.

பகுதி நேர ஊழியர்கள் சம்மந்தமாக வாரியம் பிறப்பித்த உத்தரவை அமல்படுத்துவதற்கு மாநில மையம் தலையிடுவதற்கு கீழ்கண்ட விவரங்களை தனியாக மாநில மையத்திற்கு காலதாமதமின்றி அனுப்பி வைத்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

1) வாரிய உத்தரவு 4.2.2013 ல் சொல்லப்பட்டுள்ள வாரிய உத்தரவு எண். 1 / நாள் 3.1.2001 ன் படி தொகுப்பூதியமாக ரூ.250/- , 850/-, 1000/- என தொடர்ந்து பெற்ற பகுதி நேர துப்புரவு பணியாளர்களுக்கு பணி நிரந்தரம் செய்து காலமுறை ஊதியம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். இந்த உத்தரவின் அடிப்படையில் தங்கள் திட்டத்தில் பகுதி நேர பணியாளர்களை நிரந்தரப்படுத்திய போது ஏதாவது பிரச்சனைகள் ஏற்பட்டிருக்குமானால் அவர்களின் பெயர் பிரச்சனைகள் உள்ளிட்ட பட்டியலை உடனடியாக அனுப்பிட வேண்டும்.

2) வாரிய உத்தரவு எண். 210 / நாள். 22.10.2005 ன்படி 15.10.2005க்கு முன் பணியில் சேர்ந்து 480 நாட்கள் முடிவடைந்த பகுதி நேர துப்புரவு பணியாளர்களுக்கு 15.10.2005 முதல் பணி நிரந்தரம் செய்து காலமுறை ஊதியம் வழங்கியிருக்க வேண்டும். தங்கள் திட்டத்தில் அவ்வாறு வழங்காமல் யாரேனும் இருப்பார்களேயானால் அவர்களின் பட்டியலையும் அனுப்பி வைத்திட வேண்டுமாய் கேட்டு கொள்கிறோம்.

3) மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக ஆணை எண். 11 / நாள் 2.8.2011 ஆணை வெளி வருவதற்கு முன்பு ஓய்வு பெற்றவர்களுக்கு இறந்தவர்களுக்கு (பத்தி ஆ. 3 ன் படி தகுதி இருப்பின்) நிலுவை தொகை வழங்கி இருக்கவேண்டும். அவ்வாறு வழங்காமல் இருந்தால் அவர்கள் பட்டியல் விவரம்.

4) புதியதாக துவங்கிய அலுவலகங்களுக்கு பகுதி நேர ஊழியர்களை அனுமதிப்பது பணியிலிருந்து நின்றுவிட்டவர்களுக்கு பதிலாக வேறொரு துப்புரவு பணியாளர்களை நியமிப்பது, இறந்துவிட்ட பகுதி நேர பணியாளருக்கு பதிலாக புதியவரை நியமிப்பது போன்றவைகளுக்கு தங்கள் திட்டத்திலிருந்து அனுமதிக் கேட்டு 15.3.2013 வாரிய உத்தரவின் படி விவரங்களை அனுப்ப செய்து அனுப்பி விவரங்கள் சம்மந்தமாகவும் மாநில மையத்திற்கு தகவலை அனுப்பி வைத்திடவேண்டுமாய் கேட்டு கொள்கிறோம்.

5) பகுதி நேர பணியாளர்கள் சம்மந்தமாக இந்த சுற்றறிக்கை கேட்கப்பட்ட விவரங்களை தங்களது வட்ட நிர்வாகத்தோடு பேசி விவரங்களை சேகரித்து தனி கடிதமாக உடனடியாக அனுப்பி வைத்திட வேண்டுமாய் கேட்டு கொள்கிறோம்.

பகுதி நேர பணியாளர்களுக்கு மின்ஊழியர் மத்திய அமைப்பின் வேண்டுகோளின் அடிப்படையில் நிரந்தர தொழிலாளர்களுக்கு பண்டிகை முன்பணத்தை உயர்த்தி அளித்ததை போல பகுதி நேர ஊழியர்களுக்கும் பண்டிகை முன்பணம் ரூ. 5000 வழங்க வாரியம் உத்தரவு பிறப்பித்துள்ளது என்பதை தெரிவித்து கொள்கிறோம்.

இதை அப்பகுதி ஊழியர்களின் மத்தியில் கொண்டு செல்ல உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

கூட்டுறவு நாணய சங்க தேர்தல் இரயில்வேயில் டி.ஆர்.இ.யு. சங்க அங்கீகரத்திற்கான தேர்தலில் உதவி போன்ற பணிகளில் ஈடுபட்டிருப்பீர்கள் என நம்புகிறோம். இரு தேர்தல்களுக்கும் குறுகிய நாட்களே உள்ள காரணத்தால் இந்த பணிகளில் முனைப்பாக ஈடுபட வேண்டுமாய் கேட்டு கொள்கிறோம்.

**தோழர் டி.ஜே நினைவு தினம், டாக்டர் அம்பேத்கர் பிறந்த தினம்**

வருகின்ற ஏப்ரல் 13 ல் தோழர் டி.ஜே நினைவு தினமும், ஏப்ரல் 14ல் டாக்டர் அம்பேத்கர் பிறந்த தினமும் வர உள்ளது இந்த இரு தினமும் சம்பிரதாய பாணியில் அனுஷ்டிக்காமல் மாறுப்பட்ட பாணியில் இரத்த தானம் செய்தல் போன்றவைகளை செய்து சிறப்பாக அனுசரிக்க வேண்டுமாய் கேட்டுகொள்கிறோம்.

**உறுப்பினர் சேர்ப்பு**

உறுப்பினர் சேர்ப்பு 2012 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்ப்பை இறுதிப்படுத்தி ஈ-படிவத்தை சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. இனியும் 2011 ஆம் உறுப்பினர் எண்ணிக்கையை 2012 ல் அடைய முடியவில்லை. அது சம்மந்தமான பல விவரங்கள் வட்டங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இனியும் கால தாமதம் இல்லாமல் தங்கள் திட்டத்தில் ஏற்பட்டுள்ள இடைவெளியை அகற்றுகின்ற பாணியில் 2012 ம் ஆண்டு சந்தாவை இறுதிப்படுத்தி உடனடியாக மாநில மையத்திற்கு அனுப்பி வைத்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

**உறுப்பினர் முகவரி**

வட்டங்களிலிருந்து உறுப்பினர் அடிக்கட்டைகளை அனுப்புகின்ற போது அடிக்கட்டையில் உள்ள உறுப்பினர் முகவரிக்கு மின்கதிர் அனுப்பப்படுகிறது. ஆனால் வட்டங்களிலிருந்து உறுப்பினர் அடிக்கட்டையில் உறுப்பினர் முகவரி விவரமாகவும், தெளிவாக இல்லாத காரணத்தினால் தாங்கள் அனுப்பிய முகவரிக்கு அனுப்புகின்ற மின்கதிர் திரும்பி வரக் கூடிய நிலை உள்ளது. அதனால் உறுப்பினர் முகவரியை உறுப்பினர் அடிக்கட்டையில் தெளிவாகவும், பெரும்பாலும் வீட்டு முகவரியை அனுப்பினால் உறுப்பினர்களுக்கு மின்கதிர் முறையாக சென்றடைவதற்குண்டான வாய்ப்பு ஏற்படும் என்ற அடிப்படையில் முகவரியை தெளிவாக அனுப்பி வைத்திடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**பொதுக்குழு உறுப்பினர்களின் முகவரி**

பொதுக்குழு உறுப்பினர்களுக்கு சுற்றறிக்கை அனுப்ப இருப்பதால் கிளைகளில் உள்ள தலைவர், பொருளாளர் மற்றும் கோட்ட செயலாளர்களின் முகவரியை உடன் மாநில மைய்யத்திற்கு அனுப்பவேண்டுகிறோம்.

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்.